# இயல் 3

## 3.2 : படம் இங்கே! பழமொழி எங்கே!

### மதிப்பீடு

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

### அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

Question 1.
மரப்பொந்து இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
அ) மரம் + பொந்து
ஆ) மர + பொந்து
இ) மரப் + பொந்து
ஈ) மரப்பு + பொந்து
Answer:
அ) மரம் + பொந்து

Question 2.
அக்கரை இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
அ) அக் + கரை
ஆ) அந்த + கரை
இ) அ + கரை
ஈ) அ + அரை
Answer:
இ) அ + கரை

Question 3.
சூறை + காற்று இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்
அ) சூறைகாற்று
ஆ) சூற்காற்று
இ) சூறக்காற்று

ஈ) சூறைக்காற்று
Answer:
ஈ) சூறைக்காற்று

Question 4.
கண் + இமைக்கும் இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்
அ) கண்ணிமைக்கும்
ஆ) கண் இமைக்கும்
இ) கண்மைக்கும்
ஈ) கண்ண மைக்கும்
Answer:
அ) கண்ணிமைக்கும்

Question 5.
நானூறு இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்
அ) நான்கு + நூறு
ஆ) நா + நூறு
இ) நான்கு + னூறு
ஈ) நான் + நூறு
Answer:
அ) நான்கு + நூறு

## ஆ. கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.

அ) மணியோசை - …………………. + …………………………..
ஆ) தேனிசை - …………………. + …………………………..

Answer:
அ) மணியோசை - மணி + ஓசை
ஆ) தேனிசை - தேன் + இசை

## இ. பொருத்தமான சொல்லைக் கொண்டு பழமொழியை நிறைவு செய்க:

புத்தி, அடி, காலை, பயிர், வளையாதது

1. யானைக்கும் .................... சறுக்கும்.

Answer:

அடி

2. விளையும் .................... முளையிலே தெரியும்.

Answer:

பயிர்

3. ஐந்தில் .................. ஐம்பதில் வளையாது.

Answer:

வளையாதது

4. ஆத்திரக்காரனுக்குப் ................... மட்டு.

Answer:

புத்தி

5. ஆழம் தெரியாமல் ..... .................. விடாதே.

Answer:

காலை

## ஈ. சொல்லை இடம்மாற்றிப் பழமொழியைக் கண்டுபிடிக்க.

Question 1.
உழுவதை அகல விட உழு ஆழ..................................
Answer:
அகல உழுவதை விட ஆழ உழு. வளையாதது

Question 2.
வளையாது ஐம்பதில் ஐந்தில்……………………………
Answer:
ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது.

Question 3.
மிஞ்சினால் அளவுக்கு நஞ்சு அமிழ்தமும்……………………………
Answer:
அளவுக்கு மிஞ்சினால் அமிழ்தமும் நஞ்சு.

Question 4.
குற்றம் சுற்றம் பார்க்கின் இல்லை……………………………
Answer:
குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை.

Question 5.
கற்பவர் கரையில் கல்வி நாள்சில……………………………
Answer:
கல்வி கரையில கற்பவர் நாள்சில.

## உ. வினாக்களுக்கு விடையளிக்க.

Question 1.
பழமொழி என்பது யாது?

Answer:
நம் முன்னோர்கள் தங்கள் அனுபவத்தின் மூலம் உணர்ந்து கூறிய வார்த்தைகளே பழமொழிகள் ஆகும்.

Question 2.
கிளி, யாருக்கு மாம்பழம் தருவதாகக் கூறியது?

Answer:
முகமதுவுக்கு மாம்பழம் தருவதாகக் கிளி கூறியது.

Question 3.

கிளியைப் ‘பழமொழிக் கிளி’ என அழைக்கக் காரணம் என்ன?

Answer:

கிளி மாங்காய் காய்க்கும் பருவத்தில் தோப்பிற்கு வரும் சிறுவர்களிடம் ஒரு படத்தை மரப்பொந்திலிருந்து எடுத்துக்காட்டும். அந்தப் படம் உணர்த்தும் பழமொழியைச் சிறுவர்கள் கூறிவிட்டால் அவர்களுக்கு ஒரு மாங்காய் பறித்துப் போடும். அதனால் அக்கிளியைப் ‘பழமொழிக் கிளி’ என்று அழைக்கின்றனர்.

Question 4.

இப்பாடத்தில் நீ அறிந்து கொண்ட பழமொழிகளைப் பட்டியலிடுக.

Answer:

- யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே.
- இக்கரைக்கு அக்கரை பச்சை.
- ஆடிக் காற்றில் அம்மியும் பறக்கும்.
- ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாளும் இரண்டும் சொல்லுக்குறுதி.
- காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.
- அகல உழுவதைவிட ஆழ உழுவதே மேல்.